வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 50/=

# ஈழநாடு

Eelanadu



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 29.04.2026 புதன்கிழமை இதழ் : 113 பக்கங்கள் : 08

# 2 ஆவது தடவையும் கைவிடப்பட்டது
# தையிட்டி விகாரை காணிகள் அளவீடு




யாழ்ப்பாணம், ஏப். 29

வலிகாமம் வடக்கில், தையிட்டி விகாரை அமைந்துள்ள காணியை அளவீடு செய்யும் பணிகள் நேற்று இரண்டாவது தடவையாகவும் கைவிடப்பட்டன.

காணி உரிமையாளர்கள் "காணியை விடுவிக்கும் நோக்குடனேயே காணிகளை அளவீடு செய்கின்றோம்" என திணைக்கள கடிதத் தலைப்பில் எழுத்தில் உறுதி மொழி தரவேண்டும் என அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தமையால் இந்த நிலைமை ஏற்பட்டது.

கடிதத் தலைப்பில் உறுதி மொழி வழங்கவில்லை என்றே காணி உரிமையாளர்கள் குழப்பம் விளைவித்து அளவீட்டுப்

07

## அமெரிக்க தபால்துறைக்கு இலங்கை அனுப்பிய 625,000 டொலர்கள் மாயம்!

### விசாரணைகளை ஆரம்பித்தது அரசு

கொழும்பு, ஏப். 29

இலங்கையிலிருந்து அமெரிக்க அஞ்சல் சேவைக்கு அனுப்பப்பட்ட 625,000 டொலர் மாயமாகியுள்ளமை தொடர்பில் மற்றொரு சிக்கல் எழுந்துள்ளது.

அந்தப் பணம் தங்களுக்குக் கிடைக்கவில்லை என அமெரிக்க அதிகாரிகள் உள்ளூர் அதிகாரிகளுக்குத் தெரிவித்ததை அடுத்து, அது தொடர்பான விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

07

## திறைசேரி நிதி மோசடி; மூன்று பேருக்கு அழைப்பு

கொழும்பு, ஏப். 29

அரச திறைசேரிக்குச் சொந்தமான 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி சைபர் தாக்குதல் ஊடாகக் காணாமல் போனமை தொடர்பில் விசாரணை செய்வதற்காக, நிதி அமைச்சின் உயர் அதிகாரிகள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

07

## தேனிசை செல்லப்பா காலமானார்!



சென்னை, ஏப். 29

புகழ்பெற்ற பாடகர் தேனிசை செல்லப்பா நேற்று தமிழகத்தில் காலமானார்.

தமிழ் நாட்டின் புகழ்பெற்ற நாட்டுப்புற பாடகரான அவர், 1980களில் ஈழ விடுதலைப் போராட்டப் பாடல்கள் மூலம் ஈழத்தமிழர்களிடம் பரவலாக

07

## வவுனியா மாநகர சபை நிர்வாகச் சீர்கேடு; கடும் நடவடிக்கை எடுக்க ஆளுநர் உத்தரவு

யாழ்ப்பாணம், ஏப். 29

வவுனியா மாநகர சபையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் நிர்வாகச் சீர்கேடுகள் மற்றும் நிதி முறைகேடுகள் தொடர்பில், ஓய்வுபெற்ற நீதிபதியின் விசாரணை அறிக்கையின் அடிப்படையில் மிக்க் கடுமையான நடவடிக்கைகளை எடுக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளார்.

மக்களின் வரிப்பணத்தை முறையற்ற வகையில் கையாள்வதைத் தடுக்கும் நோக்கில், சர்ச்சைக்குரிய வேலைத்திட்டங்களுக்கான கொடுப்பனவுகளை உடனடியாக நிறுத்துமாறும், சட்டவிரோத வரி அறவீடுகளைக் கைவிடுமாறும் ஆளுநர் விடுத்துள்ள அறிவுறுத்தலுக்கு அமைவாக உள்ளூராட்சி ஆணையாளரால் வவுனியா மாநகர சபை ஆணையாளருக்குக்

07

## மாலைதீவு ஜனாதிபதி இலங்கை வருகிறார்



கொழும்பு, ஏப். 29

மாலைதீவு ஜனாதிபதி முகமது முய்சு எதிர் வரும் மே மாதம் 3 ஆம் திகதி இலங்கை வரவுள்ளார்.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் அழைப்பின் பேரில் இலங்கை வரவுள்ள அவர் மே 3 முதல் 5 வரை நாட்டில்

07

## அதிகாரிகளின் அசண்டையீனத்தால் அரசு மீது மக்களுக்கு அவநம்பிக்கை!

### வடக்கு மாகாண ஆளுநர் கடும் விசனம்

யாழ்ப்பாணம், ஏப். 29

அரசாங்கத்தால் ஒதுக்கப்படும் நிதியை உரிய காலப்பகுதிக்குள் திட்டங்களாக மாற்றி மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் அதிகாரிகள் காட்டும் அசண்டையீனம், அரசாங்கம் மீது மக்களுக்கு அவநம்பிக்கையை ஏற்படுத்துவதாக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூக சேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கல் மற்றும் விநியோகம், தொழிற்துறை, தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் வர்த்தக வாணிப அமைச்சின் 2026ஆம்

07

## மைத்திரி நேற்று வாக்குமூலம்

கொழும்பு, ஏப். 29

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் நேற்று முன்னிலையானார்.

இலஞ்ச அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழுவினால் முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணை ஒன்றுக்காக வாக்குமூலம் வழங்குவதற்காக, அவர் நேற்று முற்பகல் ஆணைக்குழுவில் முன்னிலையானார்.

உமா ஓயா திட்டத்திற்கு வழங்கப்பட்ட பணம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்காக தனக்கு அழைப்பு விடுக்கப்பட்டதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன்

07

## நாட்டில் 25 வீதமான சிறுவர் மந்தபோசணையால் பாதிப்பு!

கொழும்பு, ஏப். 29

இலங்கையில் கல்வியறிவு விகிதம் மிக உயர்ந்த மட்டத்தில் இருந்தபோதிலும், 5 வயதிற்குட்பட்ட சிறுவர்களில் சுமார் 25 வீதமானோர் மந்தபோசணையால் பாதிக்கப்பட்டுள்ளதாக மத்திய மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் சமூக சுகாதார விசேட மருத்துவ நிபுணர் சுரங்க பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற தொழில்முறை விரிவுரையாளர்கள் அறக்கட்டளையின் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

07

## ஜனாதிபதி அடிக்கல் நாட்டிய வீடு மீசாலையில் நேற்று கையளிப்பு!



யாழ்ப்பாணம், ஏப். 29

தென்மராட்சி மீசாலை கிழக்கு பிரதேசத்தில் ஜனாதிபதியால் அடிக்கல் நாட்டப்பட்ட வீடு

07

## யாழ்.மீனவர் மீது தாக்குதல் நாமல் ராஜபக்ஷ கண்டனம்

கொழும்பு, ஏப். 29

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மீனவர் ஒருவர் தமிழ் நாட்டில் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கவலை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக தனது உத்தியோகபூர்வ தளத்தில் பதிவிட்டுள்ள அவர், தமிழ்நாட்டைச் சேர்ந்த சில மீனவர்களால் இலங்கை மீனவர் ஒருவர் கொடூரமாகத் தாக்கப்பட்டிருப்பது மிகுந்த கவலைக்குரிய சம்பவம் என தெரிவித்துள்ளார்.

இத்தகைய வன்முறைகள் முற்றிலும் ஏற்க

07

உண்மைகள் புனிதமானவை கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பிக்குகள் வெளிநாடு செல்ல மீண்டும் கடும் கட்டுப்பாடு!

## மகா நாயக்க தேரர்கள் அரசிடம் கோரிக்கை

கொழும்பு, ஏப். 29

கட்டுநாயக்க விமான நிலையத்தில் 110 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியுள்ள போதைப் பொருளுடன் 22 பிக்குகள் கைது செய்யப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து, பிக்குகளின் வெளிநாட்டுப் பயணங்களுக்கான கட்டுப்பாடுகளை மீண்டும் அமுல்படுத்துமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட பிக்குகள் குழுவினர், மகா நாயக்க தேரர்களின் எவ்வித உத்தியோகபூர்வ அனுமதியுமின்றி தாய்லாந்துக்குச் சென்றுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதற்கு முன்னர் பிக்குகள் வெளிநாடு செல்வதற்கு மகா நாயக்க தேரர்களின் எழுத்து மூல அனுமதி கட்டாயமாக்கப்பட்டிருந்தது. எனினும், அந்த நடைமுறையை அரசாங்கம் அண்மையில் நீக்கியிருந்தது.

இந்தச் சட்டத் தளர்வே இவ்வாறான பாரிய முறைகேடுகள் மற்றும் போதைப்பொருள் கடத்தலுக்கு வழிவகுத்துள்ளதாக பௌத்த மதத் தலைவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த பௌத்த விவகார ஆணையாளர் நாயகம் காமினி சேனாரத்ன,

"பிக்குகள் வெளிநாடு செல்வதற்கு மகா நாயக்க தேரர்களின் அனுமதியைப் பெறும் நடைமுறை தற்காலிகமாகவே நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. குறித்த கட்டுப்பாட்டு முறையை மீண்டும் உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு மகா நாயக்க தேரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்தக் கோரிக்கையைத் தாம் வெளிவிவகார அமைச்சுக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளோம்" எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சம்பவத்தில் கைது செய்யப்பட்ட 22 பிக்குகளையும் 7 நாள்கள் தடுத்து வைத்து விசாரணை செய்ய நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

அத்துடன், இந்த கடத்தல் குழுவை வழிநடத்தியதாகக் கருதப்படும் பிரதான பிக்கு கம்பஹா, மீகஹமுல்ல பகுதியில் வைத்து பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

எனினும், அவர் விசாரணைகளுக்கு உரிய முறையில் ஒத்துழைக்க மறுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# தட்டம்மை பரவலை தடுப்பதற்கு தீவிர கண்காணிப்பு நடவடிக்கை

## சுகாதார அமைச்சு விளக்கம்

கொழும்பு, ஏப். 29

நாட்டில் தட்டம்மை நோய் மீண்டும் பரவுவதைத் தடுப்பதற்கான கண்காணிப்பு நடவடிக்கைகள் குறைக்கப்பட்டுள்ளதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை தொற்றுநோய் தடுப்புப் பிரிவு மறுத்துள்ளது.

இது தொடர்பாக அந்தப் பிரிவின் சமூக மருத்துவ ஆலோசகர் விசேட வைத்திய நிபுணர் அதுல லியனபத்திரண விளக்கமளித்துள்ளார்.

நாட்டில் தட்டம்மை மீண்டும் தலைதூக்குவதைத் தடுக்க அடிமட்ட அளவில் முறையான கண்காணிப்பு அமைப்பு நடைமுறையில் இருப்பதாக வைத்திய நிபுணர் அதுல லியனபத்திரண தெரிவித்துள்ளார்.

பொதுச் சுகாதார சேவைகளின் கீழ், நோயாளி ஒருவரை அடையாளம் கண்டால் அவரோடு தொடர்பில் இருந்தவர்களையும் கண்டறிந்து, அவர்களுக்குத் தேவையான ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.

அத்துடன், குறிப்பிட்ட பகுதியில் வேறு நோயாளிகள் உள்ளனரா என்பதையும் உறுதிப்படுத்த அந்தந்தப் பகுதிகளில் விசேட கண்காணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த மாதத்தில் கண்டறியப்பட்ட இரண்டு தட்டம்மை நோயாளிகள் தொடர்பிலும் இத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக, இந்த இரண்டு நோயாளிகளும் தடுப்பூசிகள் குறித்த தவறான நம்பிக்கைகளைக் கொண்ட மற்றும் தடுப்பூசி செலுத்தத் தயங்கும் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் என்பது கண்டறியப்பட்டுள்ளது.

கடந்த 2023ஆம் ஆண்டிலும் இவ்வாறான தடுப்பூசிக்குத் தயக்கம் காட்டும் ஒரு சிறிய குழுவினரிடையே தட்டம்மை பரவல் ஏற்பட்டபோதிலும், அதனை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்த முடிந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# பாரிய விதை தட்டுப்பாட்டை நாடு எதிர்நோக்கும் அபாயம்!

கொழும்பு, ஏப். 29

இலங்கை தனது தேவைகளுக்காக இறக்குமதி விதைகளில் தங்கியிருப்பதாலும், உலகளாவிய அரசியல் ஸ்திரமற்ற தன்மையாலும் எதிர்காலத்தில் பாரிய விதை தட்டுப்பாட்டை எதிர்நோக்க நேரிடும் என தேசிய விவசாயிகள் சங்கத்தின் தலைவர் அநுராத தென்னக்கோன் எச்சரித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு அவர் வழங்கிய செவ்வியில் பின்வரும் முக்கிய விடயங்களைச் சுட்டிக்காட்டியுள்ளார்:

நாட்டின் மரக்கறிகள் மற்றும் பழங்களுக்கான விதைகளில் சுமார் 92 வீதம் தற்போது இறக்குமதி செய்யப்படுகின்றன.

சில ஆண்டுகளுக்கு முன்பு இது 80 வீதமாக இருந்த நிலையில், தற்போது பாரியளவு அதிகரித்துள்ளது.

குறிப்பாக மலைநாட்டு மரக்கறிச் செய்கைக்கான விதைகள் மலேசியா மற்றும் தாய்லாந்து போன்ற நாடுகளில் இருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றன.

எனினும், அவற்றின் தரத்தை பரிசோதிக்க முறையான கட்டமைப்பு எதுவும் இல்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

தனியார்துறையின் ஏகபோக உரிமையால் விதைகளின் விலை வேகமாக அதிகரித்துள்ளது.

இது கரட், கோவா, லீக்ஸ், வெள்ளரிக்காய் மற்றும் தர்பூசணி போன்ற பயிர்ச்செய்கைகளில் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

விவசாயத் திணைக்களம் நாடு முழுவதும் சுமார் 18 விதை உற்பத்திப் பண்ணைகளை நடத்தி வந்தபோதிலும், உள்நாட்டு விதை தேவையைப் பூர்த்தி செய்வதற்கு அவற்றைப் பயன்படுத்துவதற்கான முறையான வேலைத்திட்டம் எதுவும் இல்லை என்று தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

உடனடி நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், வரும் காலங்களில் விதை இறக்குமதி 95 வீதத்தை தாண்டும் என அவர் எச்சரித்துள்ளார். (அ)

# புலம்பெயர் இலங்கையருக்கு வாக்குரிமை; விசேட குழுவின் அறிக்கை அமைச்சரிடம்!

கொழும்பு, ஏப். 29

வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களுக்கு இந்நாட்டு தேர்தல்களில் வாக்களிப்பதற்கான சட்ட மற்றும் நடைமுறை ரீதியான வழிமுறைகளைத் தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட விசேட குழுவின் பரிந்துரைகள் அடங்கிய அறிக்கை, பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டதாக பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

வெளிநாடுகளில் வசிக்கும் 15 இலட்சத்துக்கும் அதிகமான இலங்கையர்களுக்கு இந்நாட்டு தேர்தல்களில் வாக்களிப்பதற்கான சட்ட மற்றும் நடைமுறை ரீதியான வழிமுறைகளைத் தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட விசேட குழுவின் பரிந்துரைகள் அடங்கிய அறிக்கை, பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரிடம் உத்தியோகபூர்வமாக நேற்று முன் தினம் கையளிக்கப்பட்டது.

இந்த அறிக்கையைப் பெற்றுக்கொண்டு கருத்துத் தெரிவித்த அமைச்சர் குறிப்பிடுகையில்,

நாட்டின் பொருளாதாரத்திற்கு பாரிய பங்களிப்பை வழங்கும் வெளிநாடு வாழ் இலங்கையர்களுக்கு நாட்டின் ஆட்சியைத் தீர்மானிப்பதில் வாய்ப்பளிக்காமல் இருப்பது அநீதியானது.

இது இலங்கை வரலாற்றில் மிக முக்கியமானதொரு திருப்புமுனையாகும். பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் 16 சிவில் அமைப்புகளின் கருத்துக்கள் இதில் உள்வாங்கப்பட்டுள்ளன. இந்த அறிக்கையை அமைச்சரவையில் சமர்ப்பித்த பின்னர், அது குறித்து விரிவாக ஆராய்ந்து அடுத்தகட்ட நடவடிக்கைகளை எடுக்க அரசாங்கம் தயாராக உள்ளது-என்றார். (அ)

# "மறுசீரமைக்கப்படும் இலங்கை" நிதியத்தின் சட்டபூர்வம் குறித்து ஹர்ஷ டி சில்வா கேள்வி

கொழும்பு, ஏப். 29

அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டுள்ள "மறுசீரமைக்கப்படும் இலங்கை" நிதியத்தின் சட்டபூர்வமான தன்மை குறித்து ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா கேள்வி எழுப்பியுள்ளார்.

இவ்வாறானதொரு நிதியம் சட்ட ரீதியாக இதுவரை நிறுவப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாட்டின் படி, பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட நிதியங்களைத் தவிர ஏனைய நிதியங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அவர் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

இந்த நிதியம் குறித்து தாம் பலமுறை கேள்வி எழுப்பியும், அதற்கான பணிகள் இடம்பெற்று வருவதாகவே அதிகாரிகள் பதிலளித்து வந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிதியத்தில் 9,583 மில்லியன் ரூபாய் பாதுகாப்பாக உள்ளதாக நிதி பிரதி அமைச்சர் அனில் ஜெயந்த பெர்னாண்டோ அண்மையில் தெரிவித்திருந்தார். இருப்பினும், சட்டபூர்வமாக நிறுவப்படாத ஒரு நிதியத்தில் எவ்வாறு பணம் வைப்பிலிட முடியும் என ஹர்ஷ டி சில்வா கேள்வி எழுப்பியுள்ளார்.

அரசாங்கத்தின் கூற்றுக்கள் முரணாக இருப்பதாகவும், குறித்த நிதியத்தின் வெளிப்படைத் தன்மை உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (அ)

# நாகர்கோவில் நாச்சிமார் ஆலயத்திலிருந்து நேற்று முன்தினம் வெளியேறிய இராணுவம்

யாழ்ப்பாணம், ஏப். 29

வடராட்சி கிழக்கு நாகர் கோவில் பகுதியில் அமைந்துள்ள நாச்சிமார் ஆலயத்திலிருந்து இராணுவத்தினர் வெளியேறியுள்ளனர்.

25 வருடங்களுக்கு மேலாக கைப்பற்றி வைத்திருந்த குறித்த ஆலயப் பகுதியிலிருந்து நேற்று முன் தினம் இராணுவம் வெளியேறியதை தொடர்ந்து அங்கு பக்தர்கள் வழிபாடுகளில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

ஆலயத்திலிருந்து வெளியேறிய இராணுவம், அங்கிருந்த அனைத்து கட்டடங்களையும் இடித்து அழித்துவிட்டு சென்றுள்ளது. (அ)

# "மத்திய கிழக்குப் போரும் இன்றைய உலக ஒழுங்கும்"

## கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் உரை

கொழும்பு, ஏப். 29

கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் அறிவோர் ஒன்றுகூடலில் இன்று புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு "மத்திய கிழக்குப் போரும் இன்றைய உலக ஒழுங்கும்" என்ற தலைப்பில் உரைகள் இடம்பெறுகின்றன.

பத்திரிகையாளர் வீரகத்தி தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் இலங்கை வெளியுறவு அமைச்சின் ஓய்வுபெற்ற இராஜதந்திரி ஐயம்பிள்ளை தர்மகுலசிங்கமும் சமூக அரசியல் செயற்பாடாளர் சிராஜ் மசூரும் உரையாற்றுகின்றனர். (அ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
27.04.2026 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம், சித்திரை 16

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## மனிதர்களுக்கு வழிகாட்டும் ஒரு “தெரு நாய்”

2022 ஆம் ஆண்டில் புனிதப் பயணம் மேற்கொண்ட வியட்நாமிய - அமெரிக்க பிக்குமாரை கொல்கத்தா விமான நிலையமருகே கண்ட தெரு நாய் ஒன்று அவர்களைப் பின்தொடர்ந்தது. அவர்கள் அங்கேயே அதை விட்டுச்செல்ல முயன்ற போதிலும், அது அவர்களை விடவில்லை.

வீதி விபத்தொன்றில் காயமடைந்த பின்னரும் கூட, நூறு நாட்களுக்கு மேலாக தங்களைத் தொடர்ந்து வந்து கொண்டிருந்த அந்த நாய் மீது பரிவுகொண்ட பிக்குமார் இறுதியில் அதை தத்தெடுத்து " அலோகா" என்று பெயரை சூட்டி அமெரிக்காவுக்கு அழைத்துச் சென்றனர்.

சமஸ்கிருதம் அல்லது பாளி மொழியில் இருந்து பெறப்பட்ட அலோகா என்பதன் அர்த்தம் பிரகாசம் அல்லது ஞானம் என்பதாகும். வெள்ளை, பழுப்பு நிறங்களைக் கொண்ட அலோகாவின் நெற்றியில் இதய வடிவிலான அடையாளம் இருக்கிறது.

19 பிக்குமாருடன் சேர்ந்து அமெரிக்காவில் பல்வேறு நிலப் பரப்புகளையும் கால நிலைகளையும் கடந்து 2300 மைல்கள் "அமைதி நடைபயணத்தில்" அலோகா பங்கேற்று சர்வதேச புகழைப் பெற்று அந்த அமைதிப் பயண இயக்கத்தின் அடையாளமாக இன்று மாறி "அமைதி நாய்" (Pease dog) என்று அழைக்கப்படுகிறது.

வியட்நாமிய பிக்குமார் குழுவொன்றின் தலைமையில் தம்புள்ள ரஜமகா விகாரையில் ஏப்ரில் 21 தொடங்கி அநுராதபுரம் ஊடாக கொழும்பு கங்காராம விகாரையை நேற்றைய தினம் வந்தடைந்த "அமைதி நடை பயணத்தில்" பங்குபற்ற அலோகா அமெரிக்காவில் இருந்து இலங்கை வந்தது.

நடைபயணம் முழுவதும் விசேட மிருக வைத்தியர்கள் குழுவின் கண்காணிப்பின் கீழ் அலோகாவுக்கு பிரத்தியேக பராமரிப்பு. அதற்கு தீங்கு நேர்ந்து விடாதிருப்பதை உறுதி செய்ய அம்புலன்ஸ் வண்டி கூடவே சென்றது. அடிக்கடி மருத்துவப் பரிசோதனைகள் செய்யப்பட்டன.


நான்கு வருடங்களுக்கு முன்னர் கொல்கத்தாவில் தெரு நாயாகத் திரிந்த அலோகா இலங்கையில் தற்போது நடைபயணத்தில் தெரு நாய்களின் தொல்லைகளுக்கு உள்ளாகாமல் இருப்பதை உறுதி செய்வதற்கு கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.

அலோகாவின் உணவில் கண்டிப்பான கவனம் செலுத்தப்பட்டது. அமெரிக்க உணவில் இருந்து வேறுபட்டதாக இலங்கையில் கொடுக்கப்படும் உணவினால் அது நோயுற்றுவிடக்கூடாது எனபதற்காக அதன் வழமையான உணவு தனியாகத் தயாரிக்கப்பட்டது. கடுமையான வெப்ப நிலை காரணமாக அலோகாவுக்கு தாராளமாக சுத்திகரிக்கப்பட்ட போத்தல் தண்ணீர் வழங்கப்பட்டது. வழமையாக அது காலையிலும் மாலையிலும் தான் இயற்கைக் கடன்களைக் கழிப்பது வழக்கம் என்பதால் அமைதி நடைபயணத்துக்கு இடையூறு இல்லாத வகையில் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

பௌத்த துறவிகளுடன் சேர்ந்து அமைதி நடைபயணத்தில் ஈடுபடுவதால் அலோகா உலகப் புகழ் பெற்றிருக்கிறது. ஊடகங்களில் அந்த பயணத்தின் செய்திகளையும் படங்களையும் பார்ப்பவர்கள் அலோகா மீதே விசேட கவனத்தைச் செலுத்துகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை.

அமைதிக்காக பாடுபடுவதன் மூலம் கீர்த்தியைப் பெறலாம் என்பதற்கு அலோகா மனிதர்களுக்கும் ஒரு உதாரணம் எனலாம். ஏனென்றால் அலோகாவைப் பார்த்து தெரு நாய்கள் எல்லாம் அமைதி நடைபயணத்தில் இணையப் போவதில்லை. மனிதர்கள் தான் இணைய வேண்டும்.

# தமிழ்நாட்டில் தலைவர்கள் ஓய்வெடுக்கும் நிலையில், தேர்தலில் “விஜய் தாக்கத்தை” ஆய்வு செய்யும் கட்சிகள்



மே 4 ஆம் திகதி வாக்கு எண்ணிக்கை நடைபெற இன்னும் ஐந்து நாட்கள் உள்ள நிலையில், தமிழக வெற்றிக் கழகம் தங்களது வெற்றி வாய்ப்புகளுக்கும் எதிரணிகளின் வாய்ப்புகளுக்கும் எந்த அளவிற்கு பாதிப்பை ஏற்படுத்தியிருக்கும் என்பது குறித்து அரசியல் கட்சிகள் தீவிரமாக ஆய்வு செய்து வருகின்றன.

த.வெ.க. வினால் ஏற்படும் பாதிப்புகளைச் சரியாகக் கையாண்ட கட்சிகள் அதிக இடங்களில் வெற்றி பெறக்கூடும் என்றும் வாக்குச் சரிவைச் சந்தித்த கட்சிகள் தோல்வியைத் தழுவக் கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி கே. பழனிசாமி உள்ளிட்ட அரசியல் கட்சிகளின் முக்கியத் தலைவர்கள் தங்களது வழக்கமான அரசியல் பணிகளில் இருந்து தற்காலிகமாக ஓய்வு எடுத்துள்ளனர். முதலமைச்சர் கொடைக்கானலில் தங்கியுள்ள நிலையில், பழனிசாமி தனது சொந்த ஊரான சேலத்தில் இருக்கிறார்.

தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய், முன்னர் கருதப்பட்டபடி ஆஸ்திரேலியா செல்லாமல், தனது இல்லத்திலேயே தங்கியுள்ளார்.

தேர்தலுக்கு முந்தைய கணிப்புகளை ஆய்வு செய்த பெரும்பாலான கருத்துக் கணிப்பாளர்கள், சுமார் 60 தொகுதிகளில் போட்டி மிகவும் கடுமையாக இருக்கும் என்றும் வெற்றி - தோல்வி வித்தியாசம் சில ஆயிரம் அல்லது சில நூறு வாக்குகளாக மட்டுமே இருக்கும் என்றும் கணித்துள்ளனர்.

கட்சிகளின் தற்போதைய ஆய்வுகள் முழுவதுமே த.வெ.க. பிரிக்கும் வாக்குகளைச் வங்கியைச் சுற்றியே அமைந்துள்ளது. இந்த புதிய கட்சியிடம் அதிக வாக்குகளைப் பறிகொடுக்கும் கட்சிகள் பல இடங்களை இழக்க நேரிடும். அதே நேரத்தில், த.வெ.க. வின் தாக்கத்தைக் கட்டுப்படுத்திய கட்சிகள் அதிக இடங்களில் வெற்றி பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தேர்தலுக்கு முந்தைய பெரும்பாலான கணிப்புகளின்படி, இரு முக்கிய திராவிடக் கட்சிகளின் கூட்டணியில் உள்ள கட்சிகளே த.வெ.க.வின் “விசில்” சின்னத்தால் அதிக பாதிப்புக்கு உள்ளாகியிருக்கலாம் என்றும் கடந்த தேர்தல்களை விட அவர்களின் ஆசனங்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறையக் கூடும் என்றும் தெரிவிக்கின்றன.

பாரதிய ஜனதா கட்சியின் மாநிலத் தலைவர்கள் தாங்கள் போட்டியிட்ட 27 தொகுதிகளின் கள நிலவரம் குறித்த அறிக்கையைத் தயாரித்து வருகின்றனர். தமிழக சட்டமன்றத் தேர்தலில் இது வரை இரட்டை இலக்க இடங்களைப் பிடிக்காத பா.ஜ. க, இந்த முறை எப்படியாவது தடம் பதிக்கத் துடிக்கிறது. தங்களது வெற்றி வாய்ப்புகள், பதிவாகும் வாக்குச் சதவீதம் மற்றும் த.வெ.க. வினால் தங்களுக்கு ஏதேனும் பாதிப்பு உள்ளதா என்பது குறித்து அக்கட்சித் தலைவர்கள் ஆய்வு செய்து வருகின்றனர்.

தேர்தலுக்கு முந்தைய கணிப்புகளை ஆய்வு செய்த பெரும்பாலான கருத்துக் கணிப்பாளர்கள், சுமார் 60 தொகுதிகளில் போட்டி மிகவும் கடுமையாக இருக்கும் என்றும் வெற்றி - தோல்வி வித்தியாசம் சில ஆயிரம் அல்லது சில நூறு வாக்குகளாக மட்டுமே இருக்கும் என்றும் கணித்துள்ளனர்.

கோயம்புத்தூர், திருப்பூர், நீலகிரி மற்றும் தென்காசி மாவட்டங்களில் அண்ணா தி.மு.க .- பா.ஜ.க. கூட்டணி ஒற்றுமையுடன் செயல்பட்டது குறித்து தலைவர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

அதே போன்று, பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் டாக்டர் ராமதாஸ் தனது சொந்த வேட்பாளர்களை நிறுத்திய போதிலும், சேலம் மற்றும் தர்மபுரி போன்ற மாவட்டங்களில் பா.ம.க. வாக்குகள் கூட்டணிக்குக் கிடைத்துள்ளதாகக் கருதப்படுகிறது.

காங்கிரஸ் கட்சி பல தொகுதிகளில் த.வெ.க. வினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்று பெரும்பாலான ஆய்வுகள் காட்டுகின்றன. மேலும், “உதயசூரியன்” மற்றும் “இரட்டை இலை” சின்னங்கள் தவிர்த்து தனிச் சின்னங்களில் போட்டியிட்ட விடுதலைச் சிறுத்தைகள் கட்சி,

தே.மு.தி.க.,

இடதுசாரி கட்சிகள்,

முஸ்லிம் அமைப்புகள்

ஓரிரு இடங்களைப் பெற்ற சிறிய கட்சிகள் ஆகியவை த.வெ.க.வின் வருகையால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

கரூர் நெரிசல் சம்பவத்திற்குப் பிறகு விஜய் சில நாட்கள் மட்டுமே பிரச்சாரம் செய்ததும் பெரும்பாலான மாவட்டங்களுக்கு அவர் செல்லாததும் மற்றைய கட்சிகளுக்கு ஓரளவிற்கு நிம்மதியை அளித்துள்ளது. இது குறித்து கருத்து தெரிவித்த பத்திரிகையாளர் ஒருவர், “புயலால் ஏற்பட்ட பாதிப்பை அது கரையை கடந்த பின்னரே மதிப்பிட முடியும் அதேபோன்று த.வெ.க. ஏற்படுத்திய சரி யான பாதிப்பை மே 4-ஆம் தேதி வாக்கு எண்ணிக்கைக் குப் பிறகே அறிய முடியும்” என்று குறிப்பிட்டிருக்கிறார்.

**(என். ரவிக்குமார், டெக்கான் குறோனிக்கிள்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஏப்ரல் - 29 புதன்கிழமை
பராபவ வருடம் - சித்திரை 16
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : திரையோதசி




**மேடம்**
மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்கக் கூடாது என்று முடிவெடுப்பீர்கள். வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள்.

**இடபம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள்.வேற்றுமதத்தவர் உதவுவார். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். புது பொறுப்புகளை ஏற்பீர்கள். கனவு நனவாகும் நாள்.

**மிதுனம்**
எதிர்ப்புகளையும் தாண்டி முன்னேறுவீர்கள். தாயாருக்கு மருத்துவச் செலவுகள் வந்து போகும். மகளுக்கு நல்ல வரன் அமையும்.உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நிம்மதி கிடைக்கும்.

**கடகம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். தைரியம் கூடும்.

**சிம்மம்**
இதுவரை இருந்த சோர்வுகளைப்பு யாவும் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். குடும்பத்தில் குதூகலமான சூழல் உருவாகும். உத்தியோகத்தில் தேங்கிக் கிடந்த பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் மற்றவர்களை நம்பி முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டாம். எதிர்பாராத செலவுகள் வந்துபோகும். தானுண்டு தன் வேலையுண்டு என்றிருக்க வேண்டிய நாள்.

**துலாம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும். உத்தியோகத்தில் சங்கடங்கள் வரும். அலைச்சலுடன் ஆதாயம் தரும் நாள்.

**விருட்சிகம்**
எந்த பிரச்னையையும் சமாளிக்கும் மனப்பக்குவம் கிடைக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சூட்சுமங்களை உணர்வீர்கள். சிறப்பான நாள்.

**தனுசு**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உறவினர் நண்பர்களுடன் மனம் விட்டு பேசுவீர்கள். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். மதிப்புக் கூடும் நாள்.

**மகரம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும். வியாபாரத்தில் லாபம் வரும். உத்தியோகத்தில் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் வேலைச்சுமை இருந்துக் கொண்டே இருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் மறைமுக விமர்சனங்கள் உண்டு. திட்டமிட்டு செயல்பட வேண்டிய நாள்.

**மீனம்**
கடினமான காரியத்தை எளிதாக முடிப்பீர்கள். சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள்.

# வெற்றிலைக்கேணியில் உழவியந்திரத்துடன் ஒன்பது மீனவர்கள் கடற்படையினரால் கைது

யாழ்ப்பாணம், ஏப். 29

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி பகுதியில் சட்டவிரோதமான முறையில் உழவியந்திரம் பாவித்து கரைவலை தொழில் செய்த ஒன்பது மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்

வடமராட்சி கிழக்கு கடற்பகுதியில் தொடர்ச்சியாக- சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்று வருகின்றன.



இதனடிப்படையில் நேற்று முன்தினம் வெற்றிலைக்கேணி கடற்படையினர் மேற்கொண்ட விசேட நடவடிக்கையில் வெற்றிலைக்கேணி பகுதியில் சட்டவிரோதமான முறையில் உழவியந்திரம் பாவித்து கரைவலை தொழில் செய்த ஒன்பது மீனவர்கள் இரண்டு உழவியந்திரத்துடன் கைது செய்யப்பட்டனர்

கைது செய்யப்பட்டவர்கள் உழவியந்திரம் மற்றும் ஏனைய மீன்பிடி உபகரணங்களுடன் நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக யாழ். நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர். (எ-08)

# மன்னார் கட்டுக்கரை குளத்தில் சிறுபோக செய்கைக்கான நீர் விநியோகம் ஆரம்பம்

மன்னார், ஏப். 29

மன்னார் மாவட்டத்தின் பிரதான நீர்ப்பாசன குளங்களில் ஒன்றான கட்டுக்கரை குளத்தின் கீழ், இந்த ஆண்டுக்கான சிறுபோக பயிர்ச்செய்கைக்கான நீர் விநியோகம் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நீர்ப்பாசன பணிப்பாளர் தா. திருவருட்செல்வன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. இதில் முருங்கன் பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் இ. மதுராங்கன், சம்மேளனத் தலைவர்கள் மற்றும் விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இந்த வருடம் சிறுபோகத்துக்காக மொத்தம் 2,450 ஏக்கர் நிலப்பரப்பு தெரிவு செய்யப்பட்டுள்ளது. 6 பிரதான வாய்க்கால்களின் கீழ் உள்ள 43 குளப் பகுதிகளில் இந்தப் பயிர்ச் செய்கை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

கட்டுக்கரை குளத்தின் தற்போதைய நீர்மட்டம் 11 அடி 7 அங்குலமாக காணப்படுவதுடன், தற்போது 2 அங்குல நீர் வான் பாய்ந்து வருகின்றது. குளத்தின் தற்போதைய கொள்ளளவு 30,982 ஏக்கர் அடி ஆகும். இம்முறை சிறுபோகச் செய்கைக்குத் தேவையான நீர் போதுமான அளவில் காணப்படுவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விவசாயிகளின் கோரிக்கைக்கு இணங்க, வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட குளங்களைப் புனரமைப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. இதனால், புனரமைப்புப் பணிகளை கருத்தில் கொண்டு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நீர் விநியோகத்தை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (எ)

# அராலியில் திருமந்திர சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஏப்.29

அராலி கிழக்கு மலையாளங்காடு ஐயனார் கோவிலில் சைவ வாழ்வியலில் திருமந்திரம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் வாராந்தத் திருமந்திரச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் 03 எதிர்வரும் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 04. 00 மணிக்கு நடைபெறவுள் ளது.

திருமூல நாயனார் குரு பூஜையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வும் திருவாசகப்பிரியன் க. கயிலைவாசன் “சாத்திரத்துக்கு திருமந்திரம்” என்னும் தலைப்பில் நிகழ்த்தும் சொற்பொழிவும் நடைபெறவுள்ளது.

சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ)

# அல்லைப்பிட்டி- மண்கும்பான் இடையே புற்றரைக்கு தீ மூட்டிய விசமிகள்!

## பல ஏக்கர் புற்றரை எரிந்து நாசம்

யாழ்ப்பாணம், ஏப்.29

அல்லைப்பிட்டி - மண்கும்பான் இடையே நண்டு தொழிற்சாலையின் முன்பகுதியிலுள்ள தரிசுக் காணிகளில் காணப்பட்ட புதர்களுக்கு விசமிகள் தீ மூட்டியதில் பல ஏக்கர் புற்றரைகள் எரிந்து நாசமாகின.

நேற்று முன்தினம் காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இந்த தீயினால் ஏற்பட்ட புகை காரணமாக வீதியால் மக்கள் செல்ல முடியாத நிலை உருவானது.

ஊர்காவற்றுறை - யாழ்ப்பாணம் வீதியின் பிரதான போக்குவரத்து, வீதியில் இந்த நாசகார வேலையை விசமிகள் மேற்கொண்டதை சமூக நலன் விரும்பிகள் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதை அடுத்து யாழ். மாநகர சபையின் தீயணைப்பு வாகனம் வரவழைக்கப் பட்டு தீயை கட்டுப்படுத்த துரித நடவடிக்கை எடுக்கப்பட்டது. (எ-03)



# ஆழியவளையில் வெடிபொருள்



யாழ்ப்பாணம், ஏப்.29

வடமராட்சி கிழக்கு ஆழியவளை பகுதியில் வெடிபொருள் ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது

ஆழியவளை பகுதியில் அமைந்துள்ள மீனவர் ஒருவரின் வாடிக்குள் வெடிபொருள் இருந்தது கண்டறியப்பட்டு சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் சம்பவ இடத்துக்கு வருகை தந்த மருதங்கேணி பொலிஸார் குண்டை பாதுகாப்பாக அகற்றுவதற்கான நடவடிக்கையை முன்னெடுத்தனர். (எ-08)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இலங்கைக்கு தப்பி வரமுயன்ற அகதிகள் உட்பட அறுவர் கைது

இராமேஸ்வரம், ஏப்.29

மண்டபம் கடல் வழியாக இலங்கைக்கு தப்பி வர முயன்ற அகதிகள் உட்பட ஆறு பேர் கைது செய்யப்பட்டனர்.

இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக, கடந்த 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் 300 இற்கும் மேற்பட்ட தமிழர்கள் கடல் வழியாக சட்டவிரோத மாக தனுஷ்கோடிக்கு சென்று, தமிழகத்தில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்தனர்.

இவர்கள் அனைவரும் மண்டபம் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் தங்கவைக்கப் பட்டனர்.

தற்போது இலங்கையில் பொருளாதார நிலை சீராகியுள்ளதால், முகாமில் தங்கியுள்ள வர்கள் மீண்டும் தாய்நாடு திரும்ப விருப்பம் தெரிவித்து இராமநாதபுரம் மாவட்ட அதிகாரி மற்றும் சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் பலமுறை மனுயளித்தனர்.

இருப்பினும், இவர்கள் சட்டவிரோதமான முறையில் கடல் வழியாகத் தமிழகத்துக்குள் நுழைந்ததால், இவர்களை மீண்டும் இலங்கைக்குத் திருப்பி அனுப்புவதில் சட்ட சிக்கல்கள் நிலவி வருகின்றன.

இதன் காரணமாக, முகாமில் உள்ள பலர் மீண்டும் சட்டவிரோதமாக படகுகள்மூலம்இலங்கைக்கு வரும் சூழல் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், மண்டபம் தெற்குக் கடல் பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் நின்றுகொண்டிருந்த மூன்று இலங்கைத் தமிழர்களைக் கியூ பிரிவு பொலிஸார் நேற்று முன் தினம் மாலை பிடித்து விசாரணை நடத்தினர்.

விசாரணையில், அவர்கள் குருநகர் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று தெரியவந்தது.

இவர்கள் சட்டவிரோதப் படகு மூலம் இலங்கைக்குத் தப்பிச் செல்லக் காத்திருந்ததை ஒப்புக்கொண்டனர்.

இதனையடுத்து, அவர்களுக்கு உதவியாக டீசல் மற்றும் பைகளுடன் நின்றிருந்த மண்டபம் எருமைத் தரவைப் பகுதியைச் சேர்ந்த மூவர் என மொத்தம் ஆறு பேரை பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட ஆறு பேர் மீதும் மண்டபம் பொலிஸார் வழக்குப் பதிவு செய்து, அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்திய பின்னர் சிறையில் தடுத்து வைத்துள்ளனர். (எ)

## நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்

கொழும்பு, ஏப். 29

நாட்டின் பெரும்பாலான பகுதிகளின் பல இடங்களில் பிற்பகல் ஒரு மணிக்கு பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தென் மாகாணத்தின் சில இடங்களிலும் அத்துடன் அம்பாறை மாவட்டத்தின் சில இடங்களிலும் காலை வேளையிலும் மழை பெய்யக்கூடும்.

மத்திய, சப்ரகமுவ, மேல், வடமேல், வடமத்திய மற்றும் தென் ஊவா மாகாணங்களின் சில இடங்களிலும் அத்துடன் மன்னார் மாவட்டத்தின் சில இடங்களிலும் 75 மில்லி மீற்றரிலும் கூடிய ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும்.

வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களின் சில இடங்களிலும் அத்துடன் கொழும்பு, கம்பஹா, கேகாலை, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் பகல் வேளையில் அதிகரித்த வெப்பநிலையை உணரக்கூடியதாக இருக்கும்.

புத்தளம்தொடக்கம்கொழும்பு, காலி, அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்துக்கு அப்பால் உள்ள கடல் பிராந்தியங்களின் பல இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும்.

கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்திற்கு 20 - 30 கிலோ மீற்றர் வேகத்தில் தென் திசையில் இருந்து அல்லது மாறுபட்ட திசைகளில் இருந்து காற்று வீசும்.

ஆனால், இடியுடன் கூடிய மழை பெய்கின்ற சந்தர்ப்பங்களில் பலத்த காற்று வீசுவதுடன் அவ்வேளைகளில் கடல் பிராந்தியங்கள் தற்காலிகமாக மிகவும் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# கைக்குண்டு, தோட்டாக்களுடன் முன்னாள் இராணுவ வீரர் கைது

அநுராதபுரம், ஏப். 29

அநுராதபுரம் - அட்டவீரகொல்லேவ, கோன்கொல்லேவ பகுதியில் முன்னெடுக்கப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது, கைக்குண்டு மற்றும் தோட்டாக்களுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அட்டவீரகொல்லேவ பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய இந்தச் சோதனை நடத்தப்பட்டது.

இதன்போது, சந்தேகநபரிடமிருந்து ஒரு கைக்குண்டு, 52 ரி -56 ரக துப்பாக்கி தோட்டாக்கள், 30 - 9 எம்.எம். ரகத் தோட்டாக்கள் என்பன கைப்பற்றப் பட்டன.

கைது செய்யப்பட்டவர் அட்டவீரகொல்லேவ பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய முன்னாள் இராணுவ வீரர் என்று அடையாளம் காணப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வரு

## கைதி மரணம் தொடர்பில் அதிகாரிகள் இருவர் கைது

கொழும்பு, ஏப். 29

கொழும்பு மகசின் சிறைச்சாலையில் ஏற்பட்ட சம்பவத்தில் கைதி ஒருவர் உயிரிழந்தமை தொடர்பில் சிறைச்சாலை அதிகாரி ஒருவரும் பெண் பாதுகாவலர் ஒருவரும் கைது செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் குறித்து சிறைச்சாலை திணைக்களம் விசேட விசாரணையை ஆரம்பித்துள்ளது என்று அதன் ஊடகப் பேச்சாளர் ஏ.சி. கஜநாயக்க தெரிவித்தார்.

உதவி சிறைச்சாலை அத்தியட்சகர் ஒருவரின் தலைமையில் இந்த விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை மகசின் சிறைச்சாலையில் இடம்பெற்ற ஒரு சம்பவத்தில் இரண்டு கைதிகளும் சிறை அதிகாரி ஒருவரும் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் ஒரு கைதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

போதைப்பொருள் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 38 வயது கைதியே இவ்வாறு உயிரிழந்தார்.

இரண்டு கைதிகள் சிறை அறைகளை விட்டு வெளியேறி தப்பியோட முயன்றபோது, அதனைத் தடுக்க ஒரு சிறைக் காவலர் முயன்றபோது, அங்கு நடந்த ஒரு சம்பவத்தில் அவர்கள் காயமடைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொரளை பொலிஸாரிடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ)

## பௌத்த சாசனத்தை சீரழிக்க அரசாங்கம் சதி

### அக்மீமன தயாரத்ன தேரர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப்.29

பௌத்த பிக்குகளை திட்டமிட்ட வகையில் வெளிநாடுகளுக்கு அனுப்பிஇ அவர்கள் ஊடாக போதைப்பொருட்களை கடத்தி வரச் செய்து, அதன் மூலம் பௌத்த சாசனத்தின் மீது மக்கள் கொண்டுள்ள நன்மதிப்பைச் சீரழிப்பதற்கு தற்போது அரசாங்கம் முயற்சித்து வருவதாக சிங்கள ராவய அமைப்பின் தலைவர் அக்மீமன தயாரத்ன தேரர் குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பிலுள்ள சிங்கள ராவய அமைப்பின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இலங்கையின் வரலாற்றில் இத்தனை பிக்குகள், இவ்வளவு அதிகளவிலான போதைப்பொருட்களுடன் ஒரே நேரத்தில் கைது செய்யப்பட்டமை இதுவே முதன்முறையாகும்.

இந்தச் சம்பவத்துக்குப் பின்னால் அரசாங்கத்தின் பங்களிப்பு இருக்கலாம் என்ற சந்தேகம் எமக்கு வலுவாக எழுந்துள்ளது. ஏனெனில்இ பிக்குகள் வெளிநாடுகளுக்குச் செல்வதற்கான நடைமுறைகளில் அரசாங்கம் மேற்கொண்ட மாற்றங்கள் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றன என்றும் அவர் கூறினார். (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நிதி அமைச்சின் செயலர் ஹர்ஷன வீட்டை முற்றுகையிட சென்றோர் மீது சாணி வீச்சு!

கொழும்பு, ஏப்.29

திறைசேரியிலிருந்து 2. 5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஹேக்கர்களினால் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் நிதி அமைச்சின் செயலாளர் ஹர்ஷன சூரியப்பெருமவுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காக சுகீஸ்வர பண்டார உள்ளிட்ட "நவ ஜனதா பெரமுன" கட்சியின் ஆதரவாளர்கள் குழுவினர் நேற்றுக் காலை பெலவத்தை, அகுரேகொட பகுதியில் உள்ள அவரது வீட்டுக்குச் சென்றிருந்தனர்.

அங்கு அவர்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது, சுகீஸ்வர பண்டார உள்ளிட்ட சிலரது மீது சாணத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இரு தரப்பினருக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டதோடு, நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்றனர். (எ)

# உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் திறனை மேம்படுத்துவது குறித்து ஆராய்வு

கொழும்பு, ஏப்.29

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கும் உள்நாட்டு இறைவரித் திணைக்கள அதிகாரிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

வரி வருவாயை விரிவுபடுத்துதல், வரி இணக்கத்தை அதிகப்படுத்துதல் மற்றும் நிலுவையில் உள்ள வரிகளை அறவிடுதல் உள்ளிட்ட உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் திறனை மேம்படுத்துவதற்கான வேலைத் திட்டங்கள் குறித்தும், 2026 ஆம் ஆண்டில் இதுவரையான காலப்பகுதியில் அந்தத் திணைக்களம் அடைந்துள்ள முன்னேற்றம் குறித்தும் இதன்போது மீளாய்வு செய்யப்பட்டது.

இந்த இலக்குகளை அடைந்து கொள்வதில் நிறுவனத்துக்குள் மேற்கொள்ளப்பட வேண்டிய மறுசீரமைப்பு மற்றும் டிஜிற்றல் மயமாக்கல் செயல்முறைகள் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டன.

இதன்படி, தேசிய e-invoicing முறையை அறிமுகப்படுத்தும் திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் அதனுடன் தொடர்புடைய சட்ட ஏற்பாடுகள் குறித்தும் ஆராயப்பட்டதுடன், முழுமையான திட்டத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் நிறைவு செய்யுமாறு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தினார். (எ)

# மண்மேட்டில் மோதி பஸ் விபத்து! 34 மாணவர்கள் மருத்துவமனையில்

## சாரதி பொலிஸாரால் கைது



நுவரெலியா, ஏப்.29

பொகவந்தலாவ, கெம்பியன் பகுதியிலிருந்து பொகவந்தலாவ நகரை நோக்கிப் பயணித்த பஸ் ஒன்று நேற்றுக் காலை 07. 40 மணியளவில் விபத்துக்குள்ளானது.

பொகவந்தலாவ - பலாங்கொடை பிரதான வீதியின் கொட்டியகலை பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றது.

கெம்பியன் பகுதியிலிருந்து பாடசாலை மாணவர்களை ஏற்றி வந்த பஸ்ஸில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக, சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரத்திலிருந்த மண்மேட்டில் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் பஸ்ஸில் பயணித்த சுமார் 34 மாணவர்கள் காயமடைந்து பொகவந்தலாவ மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவர்களில் சில மாணவர்கள் மேலதிக சிகிச்சைக்காக டிக்கோயா கிளங்கன் ஆதார மருத்துவமனைக்கு மாற்றப்பட்டதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

சம்பவம் தொடர்பில் பஸ் சாரதி கைது செய்யப்பட்டதோடு, பொகவந்தலாவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# மின்சார கம்பியில் சிக்கி குடும்பஸ்தர் உயிரிழப்பு!

திருகோணமலை, ஏப்.29

திருகோணமலை - மொரவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 06 யாய பகுதியில், சட்டவிரோத மின்சாரக் கம்பியில் சிக்கி நபர் ஒருவர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தனது பயிர்நிலத்தை வனவிலங்குகளிடமிருந்து பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்டிருந்த சட்டவிரோத மின்சாரக் கம்பியில் தவறுதலாக மோதியதாலேயே அவர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் மொரவெவ பகுதியைச் சேர்ந்த 57 வயதுடையவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்த நபரே தனது பயிர் நிலத்தை பாதுகாக்க இந்த மின்சாரக் கம்பிகளை பயன்படுத்தியமை ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# 15 வயது சிறுமி துஷ்பிரயோகம் 22 வயது இளைஞன் கைதானார்

மட்டக்களப்பு, ஏப்.29

மட்டக்களப்பு- காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 15 வயது சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளாகிய குற்றச்சாட்டின் பேரில் 22 வயது இளைஞன் ஒருவர் நேற்று முன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

ஞாயிற்றுக்கிழமை சிறுமி தனது வீட்டில் தனிமையில் இருந்த வேளையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சிறுமியின் தந்தை வேலைக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிய பின்னர், இந்தச் சம்பவம் குறித்து தெரியவந்துள்ளது. அதனைத் தொடர்ந்து சிறுமியின் தந்தை காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.


முறைப்பாட்டினை அடுத்து துரிதமாகச் செயல்பட்ட காத்தான்குடி பொலிஸார்இ அதே கிராமத்தைச் சேர்ந்த 22 வயது சந்தேக நபரை கைது செய்தனர்.

பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின்படி, குறித்த இளைஞன் கடந்த 03 வருடங்களாக அச்சிறுமியுடன் காதல் தொடர்பில் இருந்து வந்ததாக தெரியவந்துள்ளது.

பாதிக்கப்பட்ட சிறுமி மருத்துவ பரிசோதனைகளுக்காகவும் மேலதிக சிகிச்சைகளுக்காகவும் மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான மேலதிக சட்ட நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# யாலவில் கஞ்சா சேனை சுற்றிவளைத்த ட்ரோன்



மொனராகலை, ஏப்.29

தணமல்வில பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய தணமல்வில பொலிஸாரும் கதிர்காமம் விமானப்படை முகாமின் ட்ரோன் பிரிவினரும் இணைந்து யால காப்பகப்பகுதியில் விசேட சுற்றிவளைப்பொன்றை மேற்கொண்டனர்.

இதன்போதுஇ சுமார் இரண்டு கோடியே 50 இலட்சம் ரூபாய் பெறுமதியான கஞ்சா தோட்டமொன்று முற்றுகையிடப்பட்டதுடன், உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் இரண்டு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் தணமல்வில, கித்துல்கோட்டை பகுதியை சேர்ந்த 33 மற்றும் 36 வயதுடையவர்கள் என அடையாளம் காணப்பட்டனர்.


இவர்கள் நீண்டகாலமாக இக்காப்பகத்துக்குள் அத்துமீறி நுழைந்து கஞ்சா செய்கையில் ஈடுபட்டு வந்தமை தெரியவந்துள்ளது.

யால காப்பகத்துக்கு மேலாக ட்ரோன் கமராக்களை பறக்கவிட்டு முன்னெடுக்கப்பட்ட வான்வழி ஆய்வின் போதே இந்த பாரிய கஞ்சா தோட்டம் கண்டுபிடிக்கப்பட்டது. இதன்போது, பாதுகாப்பு படையினர் கடும் மழைக்கு மத்தியிலும் "கிரிந்தி ஓயாஆற்றைக் கடந்து, மிகவும் கடினமான பயணத்தின் பின்னர் கஞ்சா பயிரிடப்பட்டிருந்த பகுதியைச் சென்றடைந்து இந்த முற்றுகையை நடத்தினர்.

இரண்டரை ஏக்கர் பரப்பளவில் அமைந்திருந்த இந்தத் தோட்டத்தில், வெவ்வேறு உயரங்களைக் கொண்ட சுமார் 35,000 கஞ்சா செடிகள் காணப்பட்டன. செடிகள் அனைத்தும் வெட்டி அழிக்கப்பட்டதுடன், அவற்றில் ஒரு பகுதி, கைப்பற்றப்பட்ட துப்பாக்கி மற்றும் சந்தேக நபர்களை வெல்லவாய நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (எ)

# அலஸ்தோட்டம் கடற்கரையில் குவிந்துள்ள பிளாஸ்ரிக் கழிவுகள்

## சுற்றுலாப் பயணிகள் அசௌகரியம்



திருகோணமலை, ஏப்.29

திருகோணமலை- அலஸ்தோட்டம் கடற்கரைப் பகுதியில் சேகரிக்கப்பட்ட பிளாஸ்ரிக் கழிவுப் பொருட்கள் அகற்றப்படாமையால் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் உள்ளிட்ட பலரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

திருகோணமலையானது சுற்றுலாத்துறைக்கு ஏற்ற இடமாக காணப்படுகின்ற அதேவேளை சுற்றுலாத்துறையின் மூலம் பெருமளவான வருமானத்தை ஈட்டி வருகின்றது.

எனினும், திருகோணமலையில் சுற்றுலாப்பயணிகள் தங்கியிருக்கின்ற, நடமாடுகின்ற பகுதிகளில் பெருமளவானவை அசுத்தமான நிலையிலேயே காணப்படுகின்றன.

அந்தவகையில் அலஸ்தோட்டம் கடற்கரைப் பகுதியில் காணப்படுகின்ற பிளாஸ்ரிக் கழிவுப் பொருட்கள் ஒழுங்கு முறையில் அகற்றப்படாமையால் சுற்றுலாப் பயணிகள் மிகுந்த அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

குறித்த பகுதியில் பட்டிணமும் சூழலும் பிரதேச சபை உள்ளிட்ட பொறுப்பு வாய்ந்த திணைக்களங்களால் முறையான வகையில் கடற்கரை சுத்தப்படுத்தப்படவில்லை எனவும் தன்னார்வ தொண்டர்களின் ஒத்துழைப்புடன் சுத்தப்படுத்தி சேகரித்து வைக்கப்படுகின்ற கழிவுப் பொருட்கள்கூட அகற்றப்படுவதில்லை எனவும் அப்பகுதியில் உள்ள விடுதி உரிமையாளர்கள் மற்றும் மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

எனவே, சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கு சுற்றுலாப்பயணிகளை ஈர்க்கும் முகமாக திருகோணமலை கடற்கரைப் பகுதிகளை சுத்தமாக பேணுவதற்குரிய நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட தரப்பினர் மேற்கொள்ள வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

# ஊடகவியலாளர் தராக்கி சிவராமின் 21 வது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு

மட்டக்களப்பு, ஏப்.29

படுகொலை செய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் தராக்கி டி. சிவராமின் 21ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு மட்டக்களப்பு காந்தி பூங்காவில் அமைந்துள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் ஞாபகார்த்த நினைவுத் தூபியில் நேற்று நடைபெற்றது.

கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டு. ஊடக அமையம் ஆகிய ஊடக அமைப்புகளின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் சிவம். பாக்கியநாதன், சிரேஷ்ட ஊடகவியலாளர் இரா. துரைரெத்தினம், ஊடக அமைப்புகளின் உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## அமெரிக்க...

இணையவழி மோசடியுடன் தொடர்புடையதாகக் கூறப்படும், திறைசேரி நிதியிலிருந்து 2.5 மில்லியன் டொலர் அண்மையில் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டது குறித்த செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதெ அவர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார். இதன்போது, தபால் விவகாரம் குறித்துப் பேசிய அமைச்சர், குற்றப் புலனாய்வுத் திணைக்களமும் தபால் திணைக்களமும் இணைந்து இது குறித்த விசாரணைகளை நடத்தி வருவதாகத் தெரிவித்தார்.

இந்தப் பரிவர்த்தனைகள் இரண்டு வெவ்வேறு சமயங்களில் மேற்கொள்ளப்பட்டதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது என்றும் அவர் மேலும் கூறினார். (அ)

## யாழ்.மீனவர்...

முடியாதவை எனக் குறிப்பிட்ட நாமல் ராஜபக்ஷ சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மீனவரின் உடனடி பாதுகாப்பை உறுதி செய்து, அவரை விரைவாகவும் பாதுகாப்பாகவும் இலங்கைக்கு மீள அழைத்து வர அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

மேலும், இந்தச் சம்பவம் வடக்கு மாகாண மீனவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வலுவான எல்லைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் அவசியம் என்பதை வெளிப்படுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் இலங்கைத் தமிழர் பிரச்னைகள் அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படுகின்றன என்றாலும், அங்குள்ள பொலிஸாரின் முன்னிலையில் இலங்கை மீனவர்கள் தாக்கப்படும்போது அமைதியாக இருப்பது கவலைக்குரியது என்றும் நாமல் தனது பதிவில் தெரிவித்துள்ளார். (அ)

## திறைசேரி நிதி...

அரச நிதி பற்றிய குழுவின் தலைவர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

இதன்படி திறைசேரியின் செயலாளர் ஹர்ஷன சூரியப்பெரும உள்ளிட்ட நிதி அமைச்சின் உயர் அதிகாரிகள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க ஆகியோர் எதிர்வரும் ஏப்ரல் 30 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அரச நிதி பற்றிய குழு முன்னிலையில் பிரசன்னமாகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

அண்மையில் திறைசேரி நிதியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பாரிய நிதி மோசடி மற்றும் அதன் பாதுகாப்புத் தன்மைகள் குறித்து இதன்போது விரிவாக ஆராயப்படவுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பில் ஏற்கனவே குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன், சில அதிகாரிகளுக்கு வெளிநாட்டுப் பயணத்தடையும் விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## 2ஆவது தடவையும்...

பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை என அதிகாரிகள் தரப்பினர் குற்றம் சாட்டியுள்ளனர். விகாரை அமைந்துள்ள காணி உட்பட 17 பேரின் காணிகளின் வரைபடத்தை வரைவதற்கு அளவீடு செய்யும் பணிகளுக்காக, காணி உரிமையாளர்கள், விகாரைப் பகுதிக்கு அழைக்கப்பட்டனர்.

அதற்காக விகாரைப் பகுதிக்கு சென்ற மக்களை, விகாரை அமைந்துள்ள பகுதிக்கு சற்று தொலைவில் பொலிஸார் வீதிச் சோதனை சாவடி அமைத்து, காணி உறுதிகள், அடையாள அட்டைகளைப் பரிசோதித்துத்தான் அனுமதிப்போம் என கூறியமையால், காணி உரிமையாளர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் தர்க்கம் ஏற்பட்டது. அதனையடுத்து அவ்விடத்துக்கு வருகை தந்த கிராம சேவையாளர், காணி உரிமையாளர்களை விகாரைப் பகுதிக்கு அழைத்துச் சென்றார்.

அங்கு, காணி உரிமையாளர்கள் "காணியை விடுவிக்கும் நோக்குடயேயே காணிகளை அளவீடு செய்கின்றோம்" என எழுத்தில் உறுதி மொழி தரவேண்டும் என அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தனர். அதற்கு இவ்வாறான உறுதிமொழிகளை அதிகாரிகளாக நாம் எழுத்தில் வழங்கமுடியாது. அதற்கான அதிகாரங்கள் எம்மிடம் இல்லை என அவர்கள் கூறியுள்ளனர்.

நீண்ட இழுபறியின் பின்னர் காணி அளவீட்டு பணிக்களுக்காக வந்திருந்த நில அளவை திணைக்களம் , தொல்லியல் திணைக்களம், புத்தசாசன அமைச்சின் அதிகாரிகள் மாவட்ட செயலர், பிரதேச செயலர் உள்ளிட்ட 07 தரப்பினரும் ஒரு கடிதத்தில் ஒப்பம் வைத்து கையெழுத்திட்டனர்.

அதிலும் திருத்தங்கள் தேவை எனக் கூறி , மறுபடியும் ஒரு கடிதம் எழுதி அதிலும் திருத்தங்கள் சொல்லி மூன்றாவது கடிதத்தை காணி உரிமையாளர்கள் ஏற்றுக்கொண்டனர்.

ஆனாலும், அதனை ஒரு திணைக்களத்தின் கடிதத் தலைப்பில் எழுதி அதற்கு கீழ் 7 அதிகாரிகளும் கையெழுத்து வைக்க வேண்டும் என கோரினார்கள்.

நாங்கள் ஏழு அதிகாரிகளும் வெவ்வேறு திணைக்களத்துக்கு உரியவர்கள். ஒரு திணைக்களத்தின் கடிதத் தலைப்பின் கீழ் ஏழு பேரும் ஒப்பமிட முடியாது. அதிகாரிகளாக எழுத்து மூல உறுதிமொழி வழங்கும் அதிகாரமே எமக்கு இல்லாதபோதிலும், ஒரு பொதுவான கடிதத்தில் உறுதிமொழி தந்தும் அதனை ஏற்கா முடியாதுவிட்டால் அளவீட்டுப் பணிகளை கைவிடுவோம் எனக் கூறி காணி அளவீட்டு பணிகளை கைவிட்டதாக அதிகாரிகள் தரப்பில் கூறப்பட்டுள்ளது. (அ)

## தேனிசை செல்லப்பா...

அறிமுகமானார். இலங்கையில் ஆயுதப் போராட்டம் முடிவடையும் வரை விடுதலைப் பாடல்களை பாடி வந்தார். தமிழகத்தின் திருநெல்லி மாவட்டம் சிங்கிலிப்பட்டி கிராமத்தில் 1941 ஏப்ரல் 21 இல் பிறந்த இவர், 85 ஆவது வயதில் நேற்று காலமானார். திருநெல்வேலி மாவட்டம், சிங்கிலிப்பட்டி போராட்ட மேடையில் பாட்டுக் கச்சேரி ஒன்றை நடத்த சி.பா. ஆதித்தனார் விரும்பினார். அதற்குப் பாடகர்கள் யாரும் வராதநிலையில் தேனிசை செல்லப்பா மட்டும் சென்றதால் செல்லப்பா மேடையேற்றப்பட்டார்.

அவரது பாடல், பிடித்துப்போன சி. பா. ஆதித்தனார் செல்லப்பாவை தமது அரசியல் பிரசாரத்தில் நியமித்து கட்சி அலுவலகத்திலேயே தங்கவைத்தார், அங்கிருந்தபடியே கட்சி மேடைகளிலும், திராவிடர் கழக மேடைகளிலும் பாடிக் கொண்டிருந்தார் செல்லப்பா.

அந்த நேரத்தில் இலங்கையில் 1964 ஒக்ரோபர் 30 இல் மலையக மக்களை வெளியேற்றும் சிறிமாவோ ஒப்பந்தப்படி இலங்கையிலிருந்து ஐந்து இலட்சம் மலையகத்தமிழர்கள் அகதிகளாக இந்தியாவுக்கு அனுப்பப்பட்டனர். அதற்காக ஏ. எல்.நாராயணனை வைத்து ஒரு பாடலை எழுதி செல்லப்பாவைப் பாட வைத்தார் ஆதித்தனார் "செந்தமிழா மனம் பொங்குதடா.. சிங்களர் கொடுமை மிஞ்சுதடா இதை நேரு பண்டிதரும் பார்க்கவில்லை. சொந்த ஊரு மந்திரியும் கேட்கவில்லை. யாரும் துணைக்கிங்கே வரவில்லை. ஆறுதல் வார்த்தைகள் தரவில்லை. செந்தமிழா மனம் பொங்குதடா சிங்களர் கொடுமை மிஞ்சுதடா" இதனை மேடை தோறும் உணர்ச்சி மேலிடப் பாடினார் செல்லப்பா.

இந்தப்பாடல் தொடர்ந்து திராவிட இயக்க மேடைகளில் பாடிக்கொண்டிருந்த செல்லப்பாவின் குரலும் பாவமும் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர் பேபி சுப்பிரமணியத்தை கவர்ந்தது. அது 1980களின் தொடக்கம். ஈழத்திலிருந்து வந்து சென்னையில் தங்கியிருந்த விடுதலைப் புலிகளின் செய்தித் தொடர்பாளர் மூலமாக ஈழத்துப் புரட்சிப்பாடல்களை பாடினார்.

1990ஆம் ஆண்டு அவர் ஈழத்துக்கு அழைக்கப்பட்டார், யாழ்.கோட்டை மைதானத்தில் நடந்த முத்தமிழ் விழாவில் அவரது கச்சேரி நடைபெற்றது. இலட்சக்கணக்கான மக்கள் அதில் கலந்து கொண்டனர். அதனைத் தொடர்ந்து வடக்கு கிழக்கின் எட்டு மாவட்டங்களிலும் அவரது கச்சேரி சிறப்பாக நடைபெற்றது. விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனையும் அவர் சந்தித்தார். கவிஞர் காசி ஆனந்தன், கவிஞர் புதுவை இரத்தினதுரை இன்னும் பல கவிஞர்களால் எழுதிய பல பாடல்களை தேனிசை செல்லப்பா பாடியுள்ளார். (அ)

## அதிகாரிகளின்...

ஆண்டுக்கான வருடாந்த அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம், கௌரவ ஆளுநர் தலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

"அரசாங்கம் பாரிய நிதியை ஒதுக்கியும், அதனை நடைமுறைப்படுத்துவதில் அதிகாரிகள் காட்டும் தாமதம் அல்லது அலட்சியம் காரணமாக மக்கள் மத்தியில் அரசாங்கம் எதனையும் செய்யவில்லை என்ற தவறான தோற்றப்பாடு உருவாக்கப்படுகின்றது. எமது மாகாண நிர்வாகத்தின் கீழ் பணியாற்றும் அதிகாரிகள் இவ்வாறான நிலை ஏற்படாமல் பணியாற்றுவதை உறுதி செய்ய வேண்டும்" என ஆளுநர் அறிவுறுத்தினார்.

சமூக சேவைகள் திணைக்களத்தின் ஊடாக இவ்வாண்டில் 226 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் 33 திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. வட மாகாணத்தில் உள்ள மாற்றுவலுவுடையோர் தொடர்பான முழுமையான "முதன்மைப் பட்டியலை" திணைக்களம் வசம் வைத்திருப்பதை உறுதிப்படுத்துமாறும், அவர்களின் தேவைகளை முன்னுரிமை அடிப்படையில் பூர்த்தி செய்யுமாறும் ஆளுநர் பணித்தார்.

மகளிர் விவகார அமைச்சின் கீழ் வாழ்வாதார உதவி வழங்கல் தொடர்பான விடயங்கள் ஆராயப்பட்டன. தொழிற்துறை திணைக்களத்துக்கு 151 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் திட்டங்களின் கீழ் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட வேலைகளின் தற்போதைய முன்னேற்றங்கள் குறித்து இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

கூட்டுறவுத் திணைக்களத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் திட்டங்கள் ஆராயப்பட்டன. நெடுந்தீவு மக்களின் போக்குவரத்துத் தேவையைக் கருத்திற்கொண்டு, 2.614 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டில் "சமுத்திர தேவா" பயணிகள் படகைப் புனரமைக்கும் பணிகளைத் துரிதப்படுத்துமாறு ஆளுநர் உத்தரவிட்டார்.

பனை தென்னை வளக் கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் மற்றும் மதுவரித் திணைக்களத்துடன் தொடர்புடைய விடயங்கள் குறித்தும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டன. சில திட்டங்கள் தொடர்பில் ஆளுநர் மீள் பரிசீலனை மேற்கொள்ளுமாறும் இதன்போது பணிப்புரை விடுத்தார்.

இக்கலந்துரையாடலில் வடக்கு மாகாண பிரதம செயலாளர், ஆளுநரின் செயலாளர், அமைச்சின் செயலாளர், பிரதிப் பிரதம செயலாளர்கள், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், தொழிற்துறை திணைக்களப் பணிப்பாளர், ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)

## வவுனியா மாநகரசபை...

பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாநகர சபையின் நிர்வாகச் சீரின்மை, அதிகார துஷ்பிரயோகம் மற்றும் கழிவுநீர் வடிகால் தூர்வாருதலில் நடைபெற்ற முறைகேடுகள் தொடர்பில் ஆழமாக ஆராய்வதற்காக, ஆளுநரால் விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி கந்தையா அரியநாயகம் தனிநபர் விசாரணை ஆணைக்குழுவாக நியமிக்கப்பட்டிருந்தார்.

இந்த விசாரணை ஆணைக்குழுவின் விரிவான அறிக்கை மற்றும் பரிந்துரைகளின் அடிப்படையில், பின்வரும் நடவடிக்கைகளை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு ஆளுநர் அவர்கள் கட்டளையிட்டுள்ளார்.

திருநாவற்குளம் பிரதான கழிவுநீர் வாய்க்கால் தூர்வாரும் வேலைத்திட்டம் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட சகல நடவடிக்கைகளும் சட்ட ஏற்பாடுகளை மீறியுள்ளமை விசாரணையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. குறித்த வேலைக்குரிய கொடுப்பனவைக் கோரிச் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் நம்பகத்தன்மையற்றவை எனவும், சபை ஏகமனதான தீர்மானத்துக்கு அப்பாற்பட்டுத் தனிநபரின் சொந்த விருப்பத்துக்கு அமையவே இவ்வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் விசாரணை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, சட்டவிரோதமான இந்த வேலைத்திட்டத்துக்குரிய எந்தவொரு கொடுப்பனவையும் மாநகர சபையின் நிதியிலிருந்து வழங்கவேண்டாம் என ஆளுநரால் திட்டவட்டமாகக் கட்டளையிடப்பட்டுள்ளது.

வவுனியா பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக உள்ள மாநகர சபைக்குச் சொந்தமான காணி, சட்ட விதிமுறைகள் மற்றும் நடைமுறைகளைப் பின்பற்றாது வியாபாரிகளுக்குப் பகிர்ந்து வழங்கப்பட்டுள்ளமை விசாரணையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக, அமைச்சரின் அனுமதி பெறப்படாமை, சபைத் தீர்மானம் இன்றி நடவடிக்கை எடுக்கப்பட்டமை, அரச பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்படாமை மற்றும் ஒப்பந்தங்கள் இன்றி காணி வழங்கப்பட்டமை போன்ற கடுமையான மீறல்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இதனையடுத்து, விசாரணை அறிக்கையில் பின்வரும் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

சட்டவிரோதமாக வழங்கப்பட்ட காணித்துண்டுகள் தொடர்பான நடைமுறைகள் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும். காணி வழங்கும் செயற்பாடுகள் அனைத்தும் சட்ட விதிமுறைகள் மற்றும் சபைத் தீர்மானங்களின் அடிப்படையில் மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும்.

பாதிக்கப்பட்ட வியாபாரிகள் இடம்பெயர்க்கப்பட வேண்டிய சூழலில், முன்னுரிமை அடிப்படையில் மற்றும் சட்டப்பூர்வமான முறையில் மாற்று இடங்கள் வழங்கப்பட வேண்டும். அனைத்து ஒப்பந்தங்களும் உரிய அதிகாரிகளின் கையொப்பங்களுடன் சட்டரீதியாக உறுதிப்படுத்தப்பட வேண்டும். மாநகர சபைக்கு உரிய வருவாய்கள் முறையாக மதிப்பீடு செய்யப்பட்டு அறவிடப்பட வேண்டும்.

மேலும், மேற்கண்ட முறைகேடுகளின் காரணமாக, சட்டபூர்வமற்ற முறையில் வழங்கப்பட்ட காணித்துண்டுகளில் உள்ள வியாபாரிகளிடமிருந்து மாநகர சபையால் அறவிடப்பட்டு வரும் வியாபார வரிகளை உடனடியாக நிறுத்துமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆளுநரின் இந்த உத்தரவுகளுக்கமைவாக, வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எஸ்.சுதர்சன் அவர்கள், வவுனியா மாநகர சபை ஆணையாளருக்கு நேற்று விசேட எழுத்துமூல பணிப்புரையை விடுத்துள்ளார்.

இதன்படி, ஆளுநரால் வழங்கப்பட்டுள்ள இந்த உத்தரவுகளை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறும், எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த முழுமையான அறிக்கையை இரண்டு வார காலத்துக்குள் சமர்ப்பிக்குமாறும் உள்ளூராட்சி ஆணையாளரால் வவுனியா மாநகர சபை ஆணையாளருக்குக் காலக்கெடு விதிக்கப்பட்டுள்ளது. (அ)

## மாலைதீவு ஜனாதிபதி...

தங்கியிருப்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விஜயத்தின்போது, இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக பல்வேறு துறைகளை உள்ளடக்கிய புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திடவுள்ளார். பயிற்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தல், பணியாளர் பரிமாற்றத் திட்டங்களைச் செயல்படுத்துதல் மற்றும் கூட்டு ஆராய்ச்சி நடத்துதல் தொடர்பாக மாலைதீவு குடியரசின் பாதுகாப்பு மற்றும் தேசிய சேவைகள் அமைச்சுக்கும் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்துக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம்,

மாலைதீவு குடியரசின் சுகாதாரம், குடும்பம் மற்றும் நல்வாழ்வு அமைச்சுக்கும், கொழும்பு பல்கலைக்கழகத்துக்கும் இடையேயான கல்விசார் ஒத்துழைப்பு குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம், மாலைதீவு குடியரசுக்கும் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசுக்கும் இடையேயான சுற்றுலாத் துறையில் ஒத்துழைப்பு குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம் உள்ளிட்ட பல முக்கிய ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளன. (அ)

## நாட்டில் 25வீத...

மந்தபோசணை நிலைமை காரணமாக, பாடசாலைக் கல்வியைத் தொடரும் மாணவர்களில் நான்கில் ஒரு பகுதியினரால் (1/4) தங்களின் கல்வி இலக்குகளை அடைய முடியாமல் போயுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

முறையான போசணை இன்மை மாணவர்களின் அறிவு வளர்ச்சியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக அவர் வலியுறுத்தினார். கருவிலிருந்தே முறையான போசணை கிடைக்காமையானது, பிள்ளையின் அறிவு வளர்ச்சி குன்றுவதற்கு நேரடி காரணமாக அமைகிறது.

நாம் எவ்வளவுதான் சிறந்த கல்வியை வழங்கினாலும், போசணைக் குறைபாட்டால் ஏற்படும் அறிவுசார் குறைபாட்டினால் இச்சிறுவர்களை முன்னேற்றுவது கடினமாக உள்ளது. கடந்த ஆண்டு தரவுகளின்படி, நாட்டின் சிறுவர்களில் கணிசமானோர் ஏற்கனவே மந்தபோசணைக்கு ஆளாகியுள்ளனர். "போஷணைக் குறைபாடு என்பது அறிவுசார் குறைபாடாகும்" என மருத்துவர் பெர்னாண்டோ குறிப்பிட்டார்.

சமூக, பொருளாதார மற்றும் உயிரியல் ரீதியான அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ள இச்சிறுவர்களை நாட்டுக்கு பயனுள்ள பிரஜைகளாக மாற்றுவதற்கு, இந்தச் சிக்கலைச் சரியாகப் புரிந்துகொண்டு உடனடியாகத் தீர்வுகளைக் காண வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

ஒழுக்கமான மற்றும் கற்றறிந்த ஒரு பிள்ளையை உருவாக்குவதற்கு நிலவும் இந்தப் போசணைப் பிரச்சினை ஒரு பிரதான தடையாக உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தொழில்முறை விரிவுரையாளர்கள் மன்றத்தின் தலைவர் கோசல கமகே மற்றும் செயலாளர் நவீன் திலகரத்ன உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (அ)

## ஜனாதிபதி அடிக்கல்...

நேற்று உரிமையாளர்களிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

கடந்த ஜனவரி மாதம் 19 ஆம் திகதி மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க, 30 வீட்டுத் திட்டங்களுக்கான காசோலைகளை வழங்கினார். அந்த வருகையின்போது மீசாலை கிழக்கில் 20 இலட்சம் ரூபா பெறுமதியான குறித்த வீட்டுக்கான அடிக்கல்லையும் நாட்டி வைத்தார்.

இந்த நிலையில், நேற்று அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், பாராளுமன்ற உறுப்பினர் கருணைநாதன் இளங்குமரன் ஆகியோர் புதிய வீட்டை பயனாளிகளிடம் உத்தியோகபூர்வமாக கையளித்தனர். (அ)

## மைத்திரி நேற்று...

தெரிவித்தார்.

அதன்படி, குறித்த வாக்குமூலத்தை வழங்கியதன் பின்னர் அவர் வெளியேறினார் என தெரிவிக்கப்பட்டது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# கடற்கொள்ளையர்களால் பிடிக்கப்பட்ட இலங்கை மாலுமியை மீட்க நடவடிக்கை!

கொழும்பு, ஏப். 29

சோமாலிய கடற்கொள்ளையர்களால் சிறைபிடிக்கப்பட்டுள்ள எண்ணெய் கப்பலில் உள்ள இலங்கை மாலுமியைப் பாதுகாப்பாக மீட்க இலங்கை அரசாங்கம் துரித நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

இது தொடர்பாக எத்தியோப்பியாவிலுள்ள இலங்கைத் தூதரகத்துக்கு வெளிநாட்டு விவகாரங்கள் மற்றும் சுற்றுலா அமைச்சு விசேட அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது.

சோமாலியாவின் புன்ட்லேண்ட் கடற்கரைக்கு அப்பால் கடத்தப்பட்ட இந்த எரிபொருள் கப்பலில், இலங்கையர் ஒருவருடன் பாகிஸ்தான், இந்தியா, இந்தோனேசியா மற்றும் மியன்மார் ஆகிய நாடுகளைச் சேர்ந்த மாலுமிகளும் பணியாற்றி வருகின்றனர். சோமாலிய அதிகாரிகளுடன் இணைந்து, குறித்த இலங்கை மாலுமியை விரைவாக நாட்டுக்கு அழைத்து வருவது குறித்து கலந்துரையாடுமாறு தூதரக அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

தற்போதைய தகவல்களின்படி, கப்பலில் உள்ள பணியாளர்களுக்குக் காயம் ஏற்பட்டதாக எந்தத் தகவலும் உறுதிப்படுத்தப்படவில்லை.

எனினும், சம்பவம் குறித்த மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொள்வதற்கும், மாலுமிகளின் நிலைமையை மதிப்பிடுவதற்கும் சர்வதேச தரப்புகளுடன் இணைந்து இலங்கை அதிகாரிகள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.(அ)

# வியட்நாம் ஜனாதிபதி இலங்கை வருகிறார்!

கொழும்பு, ஏப். 29

வியட்நாம் ஜனாதிபதியும், வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவருமான டோ லாம் உத்தியோகபூர்வ பயணமாக இலங்கை வரவுள்ளார். இந்த விஜயம் மே 7 முதல் மே 8 வரை திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த பயணத்தின் ஒரு பகுதியாக அவர், மே 8 ஆம் திகதி இலங்கை பாராளுமன்றத்தில் உரையாற்ற உள்ளதாக சபை தலைவரின் அலுவலகம் தெரிவித்துள்ளது. (அ)

# பல்கலைக்கழக அனுமதியை பெற நேற்று முதல் விண்ணப்பிக்கலாம்!

கொழும்பு, ஏப். 29

2025 உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், 2025/2026 கல்வி ஆண்டுக்கான பல்கலைக்கழகப் பிரவேச விண்ணப்பங்கள் நேற்று முதல் மே 19 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

2025 உயர்தரப் பெறுபேறுகளின்படி, 176,527 மாணவர்கள் (62.64 வீதம்) பல்கலைக்கழகப் பிரவேசத்திற்குத் தகுதி பெற்றுள்ளனர். கடந்த மார்ச் 31 ஆம் திகதி இரவு கல்விப் பொதுத் தரா தர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியிடப்பட்ட நிலையில், இம்முறை பரீட்சைக்கு 281,810 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர்.

இதற்கிடையில், 111 பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பரீட்சை திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. 2025 உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 30,000 இற்கும் மேற்பட்டோர் அனைத்துப் பாடங்களிலும் சித்தியடையவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

# கைதாகிய 22 பிக்குகளில் 20 பேர் போதைப்பெருள் பாவித்தது உறுதி!

கொழும்பு, ஏப். 29

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கைதான பிக்குகளில் 20 பேர் போதைப்பொருள் பயன்படுத்தியுள்ளதாக நீதிமன்றத்திற்கு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த 26 ஆம் திகதி தாய்லாந்திலிருந்து வருகை தந்த 22 பிக்குகள், சுமார் 110 கிலோகிராம் "குஷ்" மற்றும் "ஹஷ்" போதைப்பொருள்களை பயணப் பொதிகளில் மறைத்து வைத்திருந்த நிலையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட 22 பிக்குகளும் நீர்கொழும்பு மேலதிக நீதிவான் சுபாணி அபேசேகர முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து, அவர்களை 7 நாள்கள் தடுத்து வைத்து விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

அதேநேரம், கைது செய்யப்பட்ட 22 பௌத்த பிக்குகளில் 20 பேர் போதைப்பொருள் பயன்படுத்தியுள்ளதாக நீதிமன்றத்துக்கு அறிக்கையிடப்பட்டுள்ளது. (அ)

# மாபியாக்களுடன் "டீல்" வைத்திருந்தால் என்னை நல்ல ஆளுநர் என புகழ்வார்கள்!

## சரியானதை செய்தால் தூற்றுவார்கள் வடக்கு ஆளுநர் வேதநாயகன் ஆதங்கம்

யாழ்ப்பாணம், ஏப். 29

மாபியாக்களுடன் "டீல்" வைத்திருந்தால், மோசடியாளர்களின் கோரிக்கைகளுக்கு இணங்கினால், செல்வாக்குள்ள சிலரின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்குச் செவிசாய்த்தால் அல்லது அவர்கள் கோருபவர்களுக்கு விரும்பிய இடமாற்றங்களை வழங்கினால் என்னை ஒரு நல்ல ஆளுநர் என்று பலரும் புகழ்வார்கள்.



ஆனால், அதைவிடுத்து சரியானது எதுவோ அதைச் செய்தால் தூற்றுவார்கள். இப்படியானதொரு சவாலான சூழலுக்குள்தான் நீங்களும் பணியாற்றப் போகின்றீர்கள். யார் என்ன சொன்னாலும், நீங்கள் மக்கள் நலன் சார்ந்த சரியான விடயங்களையே செய்யவேண்டும். நேர்மையாகச் செயற்படும் உங்களுக்கு நாங்கள் எப்போதும் துணை நிற்போம் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண பொதுச் சேவையின் இணைந்த சேவைப் பதவிகளுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் விசேட நிகழ்வு, பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) அலுவலகத்தின் ஏற்பாட்டில், வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் கேட்போர் கூடத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு புதிய உத்தியோகத்தர்களுக்கு மத்தியில் உரையாற்றும்போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில்-

உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இந்த நியமனங்கள் வெறுமனே ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்காக வழங்கப்பட்டவை அல்ல. மாறாக, மக்களுக்குச் சேவையாற்றுவதற்காகவே வழங்கப்படுகின்றன. அரசாங்க சேவையில் இரு வகையான உத்தியோகத்தர்கள் உள்ளனர். ஒரு தரப்பினர் தங்களை நாடி வரும் பொதுமக்களை எவ்வாறு தட்டிக்கழித்து அலைக்கழிக்கலாம் என எண்ணுவார்கள். மற்றையவர்கள், பொதுமக்களுக்கு எப்படியாவது சேவையைச் செய்து கொடுக்க வேண்டும் என்று அர்ப்பணிப்புடன் நினைப்பார்கள். நீங்கள் இந்த இரண்டாவது ரகத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும்.

அமைச்சர் இ.சந்திரசேகர் அல்லது பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க ஆகியோர் நினைத்திருந்தால், தங்களின் ஆதரவாளர்களின் பட்டியலை எம்மிடம் தந்து அவர்களுக்கு வேலைகளை வழங்குமாறு கோரியிருக்கலாம். ஆனால், அவர்கள் அப்படிச் செய்யவில்லை. எந்தவொரு அரசியல் தலையீடும் இல்லாமல், இந்தப் பொறிமுறை முற்றிலும் சுயாதீனமாக இயங்கியமையால்தான் நீங்கள் அனைவரும் இன்று தகுதி அடிப்படையில் நியமனம் பெற்றுள்ளீர்கள்.


இந்த நியமனங்களுக்கான அனுமதிகள் அவ்வளவு இலகுவாக எமக்குக் கிடைத்துவிடவில்லை. சாரதிகள் மற்றும் சிற்றூழியர்களுக்கான நியமன அனுமதிகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் விசேட முயற்சியால் பெற்றுத் தரப்பட்டன.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் நேர்மையாகச் செயற்படுவதாலேயே பலரின் தூற்றுதலுக்கு இலக்காக வேண்டியுள்ளது. எனினும், நேர்மையாகச் செயற்படுவர்களுக்கு அரசாங்கம் எப்போதும் பக்கபலமாக இருக்கும் - என்றார்.

இந்நிகழ்வில், வடக்கு மாகாண சபைக்குட்பட்ட திணைக்களங்களில் நிலவிய வெற்றிடங்களுக்காகத் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் 37 பேர், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் 14 பேர் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் 44 பேர் ஆகியோருக்கு உத்தியோகபூர்வமாக நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன. (அ-05)

# டில்லி ஆளுநராக தரன்ஜித் சிங்!

புதுடில்லி, ஏப். 29



இலங்கைக்கான இந்தியாவின் முன்னாள் தூதுவர் தரன்ஜித் சிங் சந்து, தலைநகர் புதுடில்லியின் 23 ஆவது ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

குடியரசுத் தலைவர் மாளிகையினால் வெளியிடப்பட்ட அறிவிப்புக்களின் பிரகாரம், புதுடில்லியின் ஆளுநராகப் பதவி வகித்த வினய் குமார் சக்சேனா லடாக்கின் ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள நிலையில், அவரது இடத்துக்கு தரன்ஜித் சிங் சந்து நியமிக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்காவுக்கான இந்தியாவின் முன்னாள் தூதுவராக பதவி வகித்த தரன்ஜித் சிங் சந்து, 2017 - 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இலங்கைக்கான இந்திய தூதுவராக கடமையாற்றினார். அதுமாத்திரமன்றி 2000 - 2004 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அவர் கொழும்பில் உள்ள இந்திய தூதரகத்தில் அரசியல் பிரிவு அதிகாரியாகப் பணியாற்றினார். (அ)

# டித்வா சூறாவளியால் கடுமையாக பாதிக்கப்பட்டோருக்கு புதிய வீடுகள்

## மே முதல் வாரத்தில் பணிகள் ஆரம்பம்

கொழும்பு, ஏப். 29

டித்வா சூறாவளியால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட கேகாலை, கண்டி, நுவரெலியா மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களில் இடைக்கால வீடுகளை அமைக்கும் பணிகள் மே மாதம் முதல் வாரத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர தலைமையில் இராணுவத் தலைமையகத்தில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலின்போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் மூலம் இடம்பெயர்ந்த சுமார் 1,000 பேருக்கு பாதுகாப்பான மற்றும் வசதியான தற்காலிக வீடுகளை குறுகிய காலத்துக்குள் அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இலங்கை இராணுவத்தின் பொறியியல் தொழில்நுட்பம் மற்றும் மனிதவள பங்களிப்புடன் இந்த வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

திட்டத்தை நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் முடிப்பதை உறுதி செய்வதற்காக, தெளிவான கால அட்டவணையுடன் கூடிய விரிவான செயல் திட்டத்தை சமர்ப்பிக்குமாறு இராணுவத்துக்கு இராஜாங்க அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார்.

அத்துடன், இப்பணிகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் தரத்தைப் பேணுவதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

வீடுகளை நிர்மாணிப்பதற்கான பொருத்தமான காணித் துண்டுகளை அடையாளப்படுத்தும் பணிகள் அந்தந்த மாவட்ட செயலர்கள் மற்றும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

(அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29.04.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media